[3rd March 1959

Upper Periyar Scheme

* 524 *Q.*—Sri N. R. THIAGARAJAN : கனம் பொதுமராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மேல் பெரியாறு திட்டம் சம்பந்தமாக கேரள சர்க்காருடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதா ?

(ஆ) அந்தத் திட்டம் நிறைவேறினால் எத்தனை ஏகராக்களுக்கு தண்ணீர் பாய்ச்சலாம் ?

(இ) எவ்வளவு ரூபாய் செலவு ஆகும் ?

The Hon. Sri P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) About 160,000 acres.

(*c*) Rs. 11 crores approximately.

Sri N. R. THIAGARAJAN: மேல் பெரியாறு திட்டம், பரம்பிக்குளம் திட்டம் போன்று ஒரு முக்கியமான திட்டம் நிதி மந்திரி அவர்கள் பட்ஜெட் பிரசங்கத்தில் இதுபற்றி மறைமுகமாக குறிப்பிட்டிருந்தார். அதை சீக்கிரம் பரிசீலனை செய்வதற்கு துரிதமான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

The Hon. Sri P. KAKKAN : இதுபற்றி கேரள சர்க்காருடன் கலந்துபேசி சீக்கிரம் எடுத்துக்கொள்ளுவதற்கு ஸோனல் கவுன்சிலில் முடிவு செய்யப் படும்.

Mr. SPEAKER : கேள்விகள் 525, 526 இரண்டையும் ஒன்ருக எடுத்துக்கொள்ளலாம்.

Women's Education

* 525 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மத்திய அரசாங்கம் நியமித்தப் பெண் கல்வி தேசீய கவுன்சி லின் சிபாரிசின்படி இம்மா நிலத்தின் ராஜ்ய கவுன்சில் நியமனம் செய் தாகிவிட்டதா? அதன் விபரமென்ன ?

(ஆ) இல்லையாஞல் எப்போது நியமிக்கப்படும் ? எந்த அடிப்படையில் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The Report of the National Committee on Women's Education has not yet been received by the State Government. Necessary action will be taken on the recommendations of the Committee on receipt of the Report.

* 526 *Q.*—Sri A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) பெண் கல்வி அபிவிருத்திக்காக மத்திய அரசாங்கம் ஒதுக்கி யிருக்கும் எழுபது லட்சம் ரூபாயில் இம்மாநிலத்தின் வீதம் எவ்வளவு ?

(ஆ) இவ்வுதவி மூலம் இம்மாநிலத்தில் பெண் கல்வி அபிவிருத்திக் காகச் செய்யப்போகும் அபிவிருத்தி வேலைகள் என்ன?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Rs. 4·94 lakhs which works out to 7·5 per cent of the total provision.

(*b*) Orders have been issued for the construction of 126 quarters (twin Units) for women teachers in District Board Elementary Schools working in rural areas in the State.

3rd March 1959]

Sri A. VEDARATHNAM : அவர்கள் இந்த நிதியை அவர்கள் உதவி செய்திருப்பது பெண் ஆசிரியர்களுக்கு விடுதிகள் கட்டி கொடுப்பதற்கு மாத்திரம்தானா? அல்லது வேறு பல துறைகளிலும் பயன்படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறதா, அப்படியானால் எந்தெந்த துறைகளில் பயன் படுத்தப்படுகிறது? 9-30 a.m.

The Hon. Sri C. SUBRAMANIAM : வேறு பல துறைகளிலும் பயன் படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த துறைகள் எல்லாம் நம் நாட்டுக்கு உகந்த முறையாக இல்லை என்பது என் கருத்து. ஆகவேதான் குடியிருப்பு வசதிகளை செய்துகொடுப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

Dr. Srimathi T. S. SOUNDARAM RAMACHANDRAN : இப்போது ஜில்லா போர்டில் வேலைசெய்யும் பெண் ஆசிரியர்களுக்கு விடுதி கட்டிக்கொடுக்கப்பட்டு வருவதாக தெரிகிறது. அதேபோன்று உதவிபெறும் (எய்டெட்) பள்ளிகளில் வேலை பார்க்கும் பெண் ஆசிரியர்களுக்கும் கிராமப்புறங்களில் இருக்கும் பள்ளிகளில் வேலை செய்யும் பெண் ஆசிரியர்களுக்கும் வீடு கட்டி கொடுக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது நமக்கு கிடைத்திருக்கின்ற உதவி சிறிய அளவில்தான். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் 11 யூனிட் என்று எடுத்து வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறோம். எல்லா பெண் ஆசிரியர்களுக்கும் குடியிருப்பு வசதி செய்து கொடுக்கவேண்டும் என்பதுதான் சர்க்காருடைய கொள்கை.

Sri C. NATARAJAN : தலைவர் அவர்களே, இம்மாதிரி பெண் ஆசிரியர்களுக்கு விடுதி கட்டி கொடுப்பதற்கு சிறிய அளவில்தான் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. இதை அதிகப்படுத்துவதற்கு சர்க்காரிடம் ஏதாவது ஆலோசனை இருந்து வருகிறதா?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்போது நமக்கு உதவி குறைவாகத்தான் கிடைத்துவருகிறது. ஒரு யூனிட் அதாவது (Twin unit) வேலை செய்வதற்கு 5,200 ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால் இதில் இடையேயுள்ளவர்கள் லாபம் சம்பாதித்து விடுவதற்கு எதிர்பார்ப்பதால் இதை நல்ல முறையில் உபயோகப்படுத்த முடியவில்லை. இதை சரியான முறையில் உபயோகப் படுத்தினால் இன்னும் அதிகமான அளவில் தொகை ஒதுக்க முடியும் என்றுதான் நம்புகிறேன்.

Sri A. VEDARATHNAM : மத்திய அரசாங்கத்திலிருந்து இந்த தொகையை வேறு துறைகளிலும் பயன்படுத்தலாம் என்று சொல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அவைகள் எந்தெந்த துறைகள் என்பதை தயவுசெய்து தெரிவிக்க முடியுமா?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஸ்கூல் மிஸ்ட்ரஸ்களுக்கு ஒரு ஏற்பாடு செய்யவேண்டும் என்பது ஒரு வகை, அது முக்கியமான பர்தா பெண்களுக்குதான் பொருந்தும். அவைகள் நமது நாட்டுக்கு பொருந்தாது என்கின்ற முறையில்தான் அவைகள் அவசியமில்லை என்று கருதி விடுதி கட்டிக்கொடுக்கும் ஏற்பாட்டை மேற்கொள்ளலாம் என்ற முடிவில் வேலை செய்து வருகின்றோம்.

Industrial Disputes (Madras Amendment) Act, 1949

* 527 *Q.*—**Sri N. K. PALANISAMI** : Will the Hon. the Minister for Industries be pleased to state the reason for repealing the Industrial Disputes (Madras Amendment) Act, 1949 (Madras Act XII of 1949)?

The Hon. Sri R. VENKATARAMAN : In view of the extensive amendments carried to the Industrial Disputes Act, 1947 by the Central Act 36 of 1956, the Madras Amendment Act XII of 1949, had to be repealed.